Registered No. M. 5068

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ ஆனிமீ 15௳ 28—6—1948 ஹிஜிரி 1367 ஷாபான்மீ 20௳ திங்கட்கிழமை. } இதழ் 23

சென்ற வாரத் தொடர்ச்சி

## ஐக்கிய முன்னேற்ற மஹாநாட்டில் டாக்டர் சையத் மஹ்மூத் முன்னுரை.

### —: தேசீய முகலாய ஆட்சி. :—

அக்காலத்திய அரசியலை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் இந்தியாவிலிருந்த முஸ்லிம்கள் ஆட்சியை தேசீய அரசாங்கமென்று நிச்சயமாகச் சொல்லலாம் ஹிந்துக்களும் முஸ்லிம்களுஞ் சேர்ந்து ஆட்சியை நடத்தினார்கள். பலனடைவதில் இருவரும் சரிசமமான பங்காளிகளாகவே இருந்தார்கள். நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்குவதும் நீதி, நியாயம் வழங்குவதுமே அரசாங்கத்தின் பொதுவான லட்சியமாக இருந்தது. அமைதியைக் குலைக்க அன்னியர் முயற்சித்தபோதெல்லாம் இருவரும் சேர்ந்தே எதிர்த்துமிருக்கின்றனர். நாதிர்ஷாஹ் படையெடுத்து வந்தபோது "தேசத்துக்கு இரண்டு எதிரிகள் முளைத்திருக்கின்றனர். ஒன்று போர்ச்சுகீஸியர்; இன்னொன்று நாதிர்ஷாஹ். நாம் ஒன்றுபட்டு எதிர்க்காவிட்டால் முகல் அரசாங்கம் அழிந்துவிடுமோவென்று அஞ்சவேண்டியிருக்கிறது" என்று சிந்தியாவுக்கு எழுதிய கடிதத்தில் பீஷ்வா எச்சரித்திருக்கிறார்.

தங்கள் ஆட்சியை பலப்படுத்திக்கொள்வதற்காக முஸ்லிம்களை ஆங்கிலேயர்கள் மட்டந்தட்ட ஆரம்பித்தார்கள் 1855-வரை முன்னேற்ற வசதிகள், சலுகைகள் ஹிந்துக்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டுவந்தன. கல்வி, பொருளாதாரத் துறைகளில் முன்னேறிய பிறகு ஹிந்துக்கள் அரசாங்கத்தைக் குறைகூற முற்பட்டுவிட்டதைக்கண்டு வெள்ளையர்களுக்கு பீதி ஏற்பட்டது 1855-ல் காங்கிரஸ் மஹாசபை ஸ்தாபிதமாயிற்று. ஆங்கிலேயர்கள் விழித்துக்கொண்டார்கள்.

ஆங்கிலேயர்களின் கவனம் ஹிந்துக்களைவிட்டு முஸ்லிம்கள் பக்கம் திரும்பிற்று. ஒரு புறம் ஹிந்துக்களுக்கு சலுகைகள், பதவிகளை அளித்து இன்னொரு புரம் முஸ்லிம்களுக்குள் சிறுமை, பொருமை உணர்ச்சிகளை ஏற்படுத்தியிருந்த வெள்ளையர்கள் பட்டம் பதவிகளின் பெயரால் ஹிந்துக்களுடன் சண்டை போடும்படி முஸ்லிம்களை தூண்டுவது சுலபமாய் விட்டது. அதனால் முஸ்லிம்களுக்கு மேலும் சிறுமையே ஏற்பட்டது. வெள்ளையர்களின் சூழ்ச்சியால் அன்று செய்த அதே தவறை முஸ்லிம்கள் இன்று மீண்டும் செய்யாமலிருக்க வேண்டும். ஆங்கில ஆட்சியில் ரூபாய்க்கு பதினைந்தணா விகிதம் பெரிய உத்தியோகங்களை வெள்ளையர்களே வகித்துவந்தனர். அதைவிட்டு ஹிந்துக்கள் வகித்து வந்த ஒரு அணா விகித உத்தியோகங்களுக்காக சண்டைபோட்டு நாம் நாளுக்கு நாள் கீழ்நோக்கியே போய்க்கொண்டிருந்தோம். இனி ஆண்டவனுக்காக பதவிச் சண்டையைவிட்டு உங்கள் திறமையை நம்பி தன்னம்பிக்கையுடன் ஆண்டவனை நம்புங்கள். திருகுர்ஆன் உங்களுக்குப் போதிப்பதும் அதுதான்.

## முஸ்லிம்களின் தவறான அரசியல்

புராதன நாகரீகத்தை மீண்டும் புதுப்பிக்கும் துறையில் ஹிந்துக்களின் நோக்கத்தை திருப்பிவிடுவதற்காக அரசியல், கல்வி முறைகளில் அநேக உபாயங்களை வெள்ளையர்கள கையாண்டார்கள். ஹிந்து, முஸ்லிம்கள் தனித்தனி சமுதாயங்கள் என்று ஆரம்பிக்கப்பட்ட பிரசாரத்தை துரதிர்ஷ்டவசமாகமுஸ்லிம்களாகிய நாம் நம்பிவிட்டோம். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் ஹிந்து, முஸ்லிம்களுக்காகத் தனித்தனி பங்குகள் ஒதுக்கப்பட்டன முதலில் மத, கலாச்சார அடிப்படையில் தனி சமுதாயம் என்று துடங்கிய வாதம் முற்றி முடிவில் அரசியல் தேசீய அடிப்படையிலும் தனிசமுதாயம் என்ற அளவுக்கு வளர்ந்துவிட்டது. முற்றிலும் வேறுபட்ட சமுதாயம் என்று கோஷித்தோம். தங்கள் ரத்தத்தை வியர்வையாக்கி நம் முன்னோர்கள் ஐக்கியப்படுத்தியிருந்த நாட்டையே கூறுபோடவேண்டுமென்றுகோரினோம். இந்திய ஐக்கியத்துக்காக முஸ்லிம்கள் செய்துள்ள சேவை மஹத்தானது. அதைக்குறித்து பெருமைப்படுவதற்கு மாறாக நாம் ஐக்கியத்தைக் குலைத்து நாட்டைக் கூறு போடவும் துணிந்துவிட்டோம்.

தகுதி, திறமை, செயலாற்றும் சக்திகளை வளர்ப்பதில் நாம் அலட்சியமாகவே இருந்தோம். வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர்ப்புகளை வெற்றிகரமாய் சமாளிப்பதால் மட்டுமே தனி நபர்களும், சமூகங்களும் முன்னேறுகின்றன. சிறுபான்மை, பெரும்பான்மை கவலை முஸ்லிம்களுக்கு என்றுமே இருந்ததில்லை அந்த பிரச்னையைத் தோற்றுவித்தவர்கள் வெள்ளையர்கள்தான் பெரும்பான்மையைக் காட்டி பயமூட்டினார்கள்

வெள்ளையர்களால் ஊட்டப்பட்ட மயக்கம் நம்மைவிட்டு இன்னும் அகலவில்லை. பட்டம் பதவி பிரச்னைகளில்மட்டும் முனைந்திருந்ததால் இதர உன்னத விஷயங்களில் கவனம் செலுத்துவது நமக்கு சாத்தியமில்லாமலேயே போய்விட்டது. பெரும்பான்மை பயம்; உரிமைகளுக்கு பாதுகாப்பு; இவ்விரண்டு பிரச்னைகளே நம் குறிக்கோளாக இருந்தன. கடந்த பன்னிரண்டு வருஷங்களாக நாம் கீழ் நோக்கியே சென்றோம். அதற்காக நான் ஒருவரையும் குறை கூற விரும்பவில்லை. தனி நபர்கள் தவறு செய்யும் போது சமூகங்களும் தவறு செய்கின்றன. நம்முடைய சமூகமும் தவறு செய்திருக்கிறது. அதன் விளைவுகளை நாம் அனுபவிக்கவேண்டியிருக்கும். சமூகங்களின் வாழ்க்கையில் இம்மாதிரி சம்பவங்கள் நிகழ்வதும் கழிந்துபோவதும் சகஜம். ஆயினும் ஆண்மையுடன் எதிர்த்து நிற்கும் சமூகங்கள் மட்டுமே அதிலிருந்து விடுபடமுடியும். இன்னும் நமக்குள் செயலாற்றும் சக்தி பாக்கியிருந்தால் விரும்பத்தகாத இந்த நிலைமையை நாம் சுலபமாகத் தவிர்க்கமுடியும்.

நாம் முன்னேற முயற்சிக்கவேண்டும். அன்னிய ஆட்சியில் செய்த அதே தவறை இன்று மீண்டும் செய்யலாகாது. முஸ்லிம்களைமட்டும் பழிப்பதால் ஒரு பிரயோஜனமுமில்லை. ஹிந்து முஸ்லிம்கள் இருவருமே தவறு செய்திருக்கின்றனர். இருவரும் வெள்ளையர்களின் கைப்பொம்மைகளாக ஆடியிருக்கின்றனர். அதன் பலனை இன்று பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறோம்.

சந்திரகுப்த, அசோக ஆட்சிகளில் இந்தியா முன்னேறிற்று. பல கூறுகளாக இல்லாமல் அன்று இந்தியா ஐக்கியமாயிருந்ததே அதற்குக் காரணம். அக்பர், ஷாஜஹான் ஆட்சியும் இந்தியாவுக்கு முன்னேற்றமளித்தன. அன்றும் இந்தியா ஒரு நாடாகவே விளங்கிக்கொண்டிருந்தது. இன்று நாட்டைக் கூறு போடுவதற்குக் காரணமாயிருந்த இந்தியர்கள் இந்தியாவின் கவுரவத்துக்கு களங்கம் ஏற்படுத்தியிருக்கின்றனர். அதனால் நம்முடைய அமைதி, சமாதானம் அதிகரித்ததா? என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பிரிவினை நம் அமைதி, சமாதானத்தை மேலும் அபாயத்திற்குள்ளாக்கிவிட்டது உண்மையல்லவா?

## மிஸ்டர் ஜின்னாவின் புதிய முயற்சி

இந்தியா, பாகிஸ்தான் கூட்டு பாதுகாப்பு சாத்தியமே என்று மிஸ்டர் ஜின்னா அபிப்பிராயம் தெரிவித்ததாக நான் சிறிது நேரத்துக்கு முன் பத்திரிகைகளில் பார்த்தேன். காயிதே ஆஜம் இதைக் காலங்கடந்தே ஒப்புக்கொண்டிருக்கிறார். என்னுடைய பலஹீனக் குரல் கராச்சிவரை எட்டமுடியுமானால் மிஸ்டர் ஜின்னா வெளியிட்ட அபிப்பிராயம் வெறும் பத்திரிகை பிரசுரமாக இருந்துவிடாமல் இரண்டு டொமினியன்களும் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளும் முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவேன். பண்டித ஜவஹர்லால் நேருவும் அடிக்கடி இம்மாதிரி அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார். கூட்டுப் பாதுகாப்புக்குப் பிறகு இரண்டு நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையும் ஒன்றாகவே வகுக்கப்படவேண்டியதும் அவசியமாகும். இரண்டு நாடுகளுக்கும் அதனால் நன்மை ஏற்படமுடியும். இப்பிரச்னை முறைப்படி சமர்ப்பிக்கப்பட்டு பரஸ்பரம்

# உங்கள் ஊழியர்களிடமே அரசாங்கம் இருக்கிறது

## சர்க்காருக்கு சந்தர்ப்பமளிக்கவேண்டும்.

—[ மிஸ்டர் ஆஸப் அலி ]—

புதுடில்லி ஜூன்—18

நேற்று மாலை டில்லி மாகாண காங்கிரஸ் கமிட்டிசார்பில் ஒரிஸ்ஸாமாகாண கவர்னராக நியமிக்கப்படவிருக்கும் மிஸ்டர் ஆஸப் அலியை கௌரவித்து ஒரு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் மிஸ்டர் ஆஸப் அலி கீழ்வருமாறு பேசினார்:— உலகத்தின் பெரிய, பெரிய நாடுகள் நம்முடைய நாட்டை கூர்ந்து கவனித்து வருகின்றன. நாம் உலகத்தின் ஒரு மாபெரும் நாட்டினராக விளங்க நிச்சயித்திருப்பது அவர்களுக்குத்தெரியும். நம்முடைய ஒவ்வொரு செய்கையையும் அவர்கள் ஆராய்ந்து பரிசீலித்து வருகிறார்கள். இந்நிலையில் நாட்டின் நல்லபெயரைக் கெடுக்கக்கூடிய எந்த ஒருகாரியத்தையும் செய்யாமலிருக்க வேண்டியது நம் கடமை. இதுவரை நம்முடைய நோக்கங்களை அடிமைத்தளைகள் இறுகப் பிணைத்தேயிருக்கின்றன. நம் நோக்கங்களை மாற்றிக்கொள்ளவேண்டும். இந்தியாவிடம் போதுமான ஜனத்தொகை, மூலப்பொருள்கள், ஆறுகள், சமுத்திரம், காடுகள், இதர பொருள்கள் இருககின்றன. ஆயினும் மக்களிடையே தியாக மனப்பான்மையும் உறுதியும், ஏற்பட்டால் மாத்திரமே அவைகளை சரியான துறையில் பிரயோஜனப்படுத்திக் கொள்ளமுடியும்.

ஆங்கிலேயர்கள் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் சுயநலமின்மை, அடக்கம், சகிப்புத்தன்மைக்கு சிறந்த உதாரணத்தைக் காட்டியிருக்கின்றனர். சமீபத்தில் அவர்களுடைய உணவு, உடை, வாழ்க்கையின் இதர தேவைகள் குறைக்கப்பட்டன ஆயினும் அவர்கள் எல்லா கஷ்டங்களையும் சிரித்த முகத்துடன் சகித்தனா. சலிப்படைந்ததும், குறைகூற ஆரம்பித்ததும் உண்டாயினும் அவர்களுடைய சலிப்பு எப்பொழுதும் நிர்மாண அடிப்படையைக் கொண்டதாகவே இருந்தது. இந்திய பொதுமக்களிடையே நிர்மாண ஆர்வம் போதுமான அளவுக்கு இல்லாமலிருப்பது இந்தியாவின் பெருங்குறையாகும். நம் அடிமை நாட்கள் கழிந்துவிட்டன. இன்று அரசாங்கம் மக்களுடைய அனுபவம் வாய்ந்த தலைவர்களின் கையில் இருந்துவருகிறது. அவர்கள் வாழ்க்கை முழுவதும் தேசத்திற்காக தியாகம் செய்தவர்கள். மக்களுக்கு திருப்தி அளிக்கவில்லையென்றால் அரசாங்கத்தை மாற்றியமைக்க சட்டபூர்வமாக மக்களுக்கு உரிமை உண்டு வேலை செய்து காட்டுவதற்கான சந்தாப்பத்தை நாம் நம்முடைய சர்க்காருக்கு அளிக்கவேண்டும்.

டில்லி மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ ராதாரமணன் கமிட்டிசார்பாக மிஸ்டர் ஆஸப் அலிக்கு வந்தனோபசாரம் கூறினார்

---

பைஸல் செய்துகொண்ட பிறகு காஷ்மீர் பிரச்னைக்கு முக்கியத்துவம் ஒன்றும் இருக்கமுடியாது. அது தானாகவே தீர்ந்துவிடக்கூடும்.

மூன்றாவது யுத்த அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. இங்கிலாந்து அரசர் கனடாவுக்குப் போய்விடுவார் என்ற செய்தி நேற்றைய பத்திரிகைகளில் பிரசுரமாயிருந்தது. ஆண்டவனுடைய கோபத்தின் ரூபத்தில் யுத்தம் மீண்டும் நடக்கப்போகின்றது. இந்தியாவோ அல்லது பாகிஸ்தானோ ஏதாவதொரு யுத்தம் செய்யும் நாட்டை ஆதரிப்பதால் இரண்டுமே பாதிக்கப்பட வேண்டியிருக்கும். யுத்தத்திலிருந்து விலகியிருப்பதே இரண்டு டொமினியன்களுக்கும் நன்மை பயக்கமுடியும் எந்த கோஷ்டியுடனும் சேரப்போவதில்லையென்று பண்டித நேரு அடிக்கடி அபிப்பிராயம் தெரிவித்துவருகிறார். இந்தியாவும் பாகிஸ்தானும் வரக்கூடிய அபாயத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளமுடியும். இதை நாம் முன்னமேயே சிந்தித்திருந்தால் நாம் தப்பித்துக்கொள்ளுவது மட்டுமின்றி இதர நாடுகளையும் யுத்த அழிவிலிருந்து காப்பாற்ற முடிந்திருக்கும் நம்மை பயமுறுத்திக்கொண்டிருக்கும் யுத்தத்தைத் தடுத்து வேற்றுமைகளைப் போக்கி உலக அமைதியைக் காத்து நம்முடைய கௌரவத்தையும் உயர்த்திக்கொள்வது சாத்தியமாக இருந்திருக்கும். இந்தியா பிரிவினைக்குள்ளாகாமலிருந்திருந்தால் மூன்றாவது யுத்தத்தைத் தடுப்பதற்கு வேண்டிய சக்தி இந்தியாவின் குரலில் இருந்திருக்கும். இன்று பரஸ்பர சண்டைக்காக நாமே வரிந்துகட்டிக்கொண்டு நிற்கையில் நம்முடைய ஸ்தானீகர்கள் சண்டையைத் தவிர்ப்பதற்காக பேசவாய் ஏது? காய்தே ஆஜம் தன்னுடைய உயர்ந்த அபிப்பிராயத்தை பத்திரிகை பிரசாரத்துடன் நிறுத்திக்கொள்ளமாட்டார் என்று நம்புகிறேன். அவர் வெளியிட்ட யோஜனையால் எல்லா பிரச்னைகளும் தீரக்கூடும். அதை அமுலுக்குக்கொண்டுவருதில் அவசரம் காட்டப்பட வேண்டும். காலத்தைக் கடத்துவதால் பிரயோஜனமில்லை. சந்தர்ப்பம் இழந்துவிட்ட பிறகு சிறந்த யோஜனைகளும் பலனற்றுப்போய்விடுகின்றன என்பதற்கு கடந்த கால சம்பவங்களே சான்று

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 28—6—'48 திங்கட்கிழமை { இதழ் 23


## பழைய, புதிய
## கவர்னர் ஜெனரல்கள்.

**பதினைந்து** மாதங்கள் பதவியிலிருந்த கடைசி வைஸ்ராயும், கடைசி ஆங்கில கவர்னர் ஜெனரலுமான லார்டு மவுண்ட் பேட்டன் விடைபெற்று இந்தியாவை விட்டுக் கிளம்பிவிட்டார் இந்திய அரசாங்கத்தின் சட்ட பூர்வமான தலைமைப் பதவியை அவருக்குப் பிறகு சக்கரவர்த்தி ஸி. ராஜகோபாலாச்சாரியார் ஏற்றுக்கொண்டிருக்கிறார். வைஸ்ராய்கள், இதர பெரிய மனிதர்கள் வரும்போதும், போகும்போதும் அன்றைய நிலைமை, வருங்கால நம்பிக்கைகள், கடந்தகால நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தை விளக்குவதும் எடுத்துக்காட்டுவதும் சம்பிரதாயமாகவே போய்விட்டது அதனால் அம்மாதிரி வைபவங்களின்போது சம்பிரதாயத்தையொட்டி நடக்கும் காரியங்களும் நிகழும் சொற் பொழிவுகளும் வெறும் சடங்குகளாகவே கருதப்படுகின்றன ஆயினும் லார்டு மவுண்ட் பேட்டன் பொருத்தவரை எதையும் மிகைப்படுத்திக் கூறவேண்டிய அவசியமேயில்லை அவர் பதவியிலிருந்த பதினைந்து மாத காலம் இந்திய சரித்திரத்தின் முக்கியமான பகுதியும் துன்பங்கள் நிறைந்த காலமுமாகும். தன்னுடைய வாரிசுக்கு அவர் ஒன்றும் விட்டு வைக்காமல் போய்விடவில்லை. இந்தியாவின் எதிர்காலத்தைப் பொருத்த பல சிக்கலான முக்கியப் பிரச்னைகளை விட்டே சென்றார். கடந்த பதினைந்து மாத காலத்தை நினைக்கையில் இவ்வளவு குறுகிய காலத்துக்குள் இத்தனை பெரிய சம்பவங்கள் நடந்தேற முடியுமென்று நம்பக்கூடவில்லை இந்தியாவின் பிரிவினை, இந்தியா, பாகிஸ்தான் 'சுதந்திர' டொமினியன்களின் அமைப்பு, ஆகஸ்ட் கலவரங்கள், லட்சக்கணக்கான மக்களின் கொலை, விடிழந்த கோடிக்கணக்கான மக்களின் அலங்கோலம், காஷ்மீர் படையெடுப்பு, இந்தியா, பாகிஸ்தானிடையே 'அதிகார பூர்வமற்ற போர்' ஆரம்பம், ஐக்கிய நாட்டிடம் இந்தியாவின் புகார், சர்வதேச மேடையில் இந்தியா, பாகிஸ்தானிடையே சர்ச்சை, ஹைதராபாத் பிணக்கு, அமைதியான சமரச முயற்சிகளின் முறிவு, இந்தியாவின் மிகப் பெரிய ஆத்மீக தலைவர், உலகோத்தமர், சத்திய சீலர், அஹிம்ஸா பிரசாரகர், அன்பின் தூதரான மஹாத்மா காந்தியை ஒரு இந்தியனே கொலை செய்தல் போன்ற சம்பவங்கள் லார்டு மவுண்ட் பேட்டன் துரையின் பதினைந்து மாத பதவி காலத்துக்கு இருநூறு வருஷ பிரிட்டிஷ் ஆட்சியைவிட அதிக முக்கியத்துவம் அளித்துவிட்டன. எனவே மவுண்ட் பேட்டன் துரையின் காலம் இந்திய சரித்திரத்தில் மிக முக்கிய ஸ்தானத்தைப் பெறப்போகின்றது. கடந்த பல ஆயிரம் வருஷங்களில் இந்தியா கண்ட புரட்சிகள் அநேகம். ஆரியர், அரபியர், பட்டாணியர், முகலாயரின் படையெடுப்பு; மஹ்மூத், கஜினி, நாதர்ஷாவின் சூரை, முகம்மது கோரி, பாபரின் ஆக்ரமிப்பு ; தைமுரின் தாக்குதல்கள் ; இவைகளை இந்தியா சகித்திருக்கிறது. சிராஜுத்தௌலா, திப்பு சுல்தானின் வீர மரணத்தைப் பார்த்திருந்த இந்தியா வீராங்கனை ஜான்ஸி ராணியின் கொலையும், தான்தியா தோபே தூக்குமேடையில் தொங்கியதையும் கண்டிருக்கிறது. பகதூர்ஷாவின் நாடு கடத்தல், இளவரசர்களின் சித்திரவதை, ராணிகளின் மானபங்கம், அவத்ரொஹேலாக்களின் படுகொலை, இந்தியா பார்த்திருக்கிறது. பகத்சிங்கின் தூக்குதண்டனை, ஜாலியன்வாலாபாக் அட்டூழியத்தின் வடுக்கள் இதுவரை ஆறவில்லை. ஆயினும் மதத்தின் பெயரால் நடந்த காட்டு மிராண்டித்தனத்தைப்போல் சகோதரன் கையால் சகோதரன் கொல்லப்பட்டதையும், அண்டை வீட்டுக்காரர்கள் ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்தியதையும் இந்தியா கண்டதில்லை. தகப்பனும், சகோதரனும் மகளையும், சகோதரியையும் கற்பழித்த கேவலத்தை இந்தியா கண்டதில்லை. தனக்கு விமோசனத்தை வாங்கிக்கொடுத்த உபகாரியை, அரசியல் ஆத்மீகத் தலைவரை, தன் வயிற்றில் உதித்த ஒரு குழந்தையே இரக்கமின்றி கொன்றதை இந்தியா கண்டதில்லை. ஆனல் கடந்த பதினைந்து மாதங்களில் இந்தியா எல்லாவற்றையும் பார்த்துவிட்டது. அல்லது பார்க்கும்படியான நிர்ப்பந்தம் அதற்கு ஏற்பட்டுவிட்டது. லார்டு மவுண்ட் பேட்டன் வரும்போது இருந்த நிலைமை வேறு. அவர் போகும்போது இந்தியாவின் நிலைமையே வேறு. அவர் இந்தியாவுக்கு வந்தபோது தேசம் ஒரு எரிமலையாக இருந்தது. ஒவ்வொரு இந்தியனும் சுதந்திரத்துக்காக துடித்துக்கொண்டிருந்தான். தேச பக்தர்

களும், சுதந்திர வீரர்களும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் மோதத் தயாராயிருந்தனர். அவர்களுடைய ஒரு பொது எதிரியாக இருந்தது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்தான். அடிமைத் தலைகளை தகர்த்து முன்னேறவேண்டுமென்ற உணர்ச்சி உள்ளங்களில் ததும்பிக்கொண்டிருந்தது ஆனால் மவுண்ட் பேட்டன் திரும்பும்போது தேசத்தில் மரணத்தைப் போன்றதொரு நிசப்தத்தை விட்டுச்சென்றார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மீதிருந்த கோபமும், வெறுப்பும் தணிந்துவிட்டது. பொறுப்பு சுமத்தப்பட்டிருப்பதால் உணர்ச்சிகள் மங்கிவிட்டன. சுதந்திரத்துக்காகப் போராடி புஜங்கள் ஓய்ந்துவிட்டதால் உறுதிகள் தளர்ந்துவிட்டன புரட்சி நடந்தேறிவிட்டதால் "புரட்சி ஓங்குக" கோஷங்கள் ஓய்ந்துவிட்டன. சுதந்திரம் கிட்டிவிட்டதால் சுதந்திரப் பேச்சு நின்றுவிட்டது இன்று சகோதரனுடன் சகோதரனுக்குச் சண்டை ; நேற்றுவரை நண்பர்களாயிருந்தவர்கள் இன்று எதிரிகள்; புரட்சி வீரர்களாயிருந்தவர்கள் புரட்சியின் விரோதிகள் ; முற்போக்காளர்களாயிருந்தவர்கள் பிற்போக்காளர்களாகப் பார்க்கின்றனர் ; கொள்கைக்காக உயிர் வாழ்ந்தவர்கள் பதவிகளுக்காகப் போராடுகின்றனர் ; தேசத் தொண்டர்கள் பதினான்காவது நூற்றாண்டின் யதேச்சாதிகாரிகளாக மாறுகின்றனர். மவுண்ட் பேட்டன் வரும்போது வெள்ளை சிப்பாய்களும் அவர்களுடைய எஜமானர்களும் உயிருக்குப் பயந்து கொண்டிருந்தனர். அவர் போகும்போது அவர்களைவிட சுதந்திரமுள்ளவர் யாருமிருக்கவில்லை. புரட்சியின் போக்கு மாறிவிட்டது. பிரிட்டன் இந்தியாவின் ஆப்த நண்பனாகிவிட்டது. பூரண சுதந்திர லட்சியத்தை காங்கிரசுக்குள் புகுத்தியவர்களே இன்று டொமினியன் அந்தஸ்தை வரவேற்கும்படியாய்விட்டது. லட்சக்கணக்கான டில்லி வாசிகள் ஆர்வத்துடனும், அந்தரங்க சுத்தியுடனும் மவுண்ட் பேட்டன் தம்பதிகளுக்கு விடை கொடுத்தனுப்பினர். அன்பு அந்தரங்க சுத்தியுடன் உணர்ச்சி வாய்ப்பட்ட இவ்வளவு பெரும் திரளை பார்த்ததில்லையென்று மவுண்ட் பேட்டனே சொல்லிவிட்டார். மற்றவர்கள் சாதிக்கமுடியாத காரியங்களையும் என்னுடைய கணவர் நிச்சயமாகச் சாதிப்பார் என்று லேடி மவுண்ட் பேட்டன் பெருமைப்பட்டார். தன்னுடைய வெற்றியைக்குறித்து மவுண்ட் பேட்டனும் புளகாங்கிதமடைந்தார். மவுண்ட் பேட்டனைவிட அதிகமாய் சாதித்த அந்தரங்க சுத்தியுள்ள நல்ல வைஸராய் அல்லது கவர்னர் ஜெனரல் இந்தியாவுக்கு வந்ததில்லை யென்று பண்டித நேருவும் கூறினார். நாம் அதை ஒப்புக்கொள்கிறோம். மவுண்ட் பேட்டன் வெற்றியுடன் திரும்புகிறார். அவருக்கு யாரும் நிகரில்லை. நாற்பத்தெட்டு வருஷங்களே அவருடைய வயது. அவருடைய வாழ்க்கையில் அவர் வெற்றியடைவார் என்று நாமும் நம்புகிறோம். கவர்ச்சி மிகுந்த தோற்றம், உயரிய குணாதிசயங்கள், நிகரற்ற புத்திசாலித்தனத்தால் தன்னுடைய ஜாதியினருக்கும், தேசத்துக்கும் இதைப்போலவே இன்னும் சேவை செய்யட்டும். இன்று புதிய கவர்னர் ஜெனரல் மேன்மை தங்கிய ஸி ராஜகோபாலாச்சாரியார் எதிர் நோக்க வேண்டியிருக்கும் மவுண்ட் பேட்டன் விட்டுச்சென்ற, தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகளுக்கு அரசாங்க வேலைகளுடன் அதிக சம்மந்தமிருப்பதற்கில்லை. இருப்பினும் அவருடைய முதிர்ந்த அனுபவம், நிகரற்ற அரசியல் ஞானம், அசையாத உறுதி, மெச்சத்தகுந்த சகிப்புத்தன்மை, நடுநிலைமை முதலிய குணங்கள் மந்திரிகளுக்கு வழிகாட்டியாக இருக்க முடியும் இன்று தேசத்தை எதிர்நோக்கியிருக்கும் பிரச்னைகளில் காஷ்மீர் ஹைதராபாத் பிரச்னைகள் உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் உள்ளவை. அடுத்தபடி அகதிகளின் குடியேற்றம். இரண்டு டொமினியன்களிடையே நல்லுறவு, தேசத்தின் பொருளாதார முன்னேற்றப் பிரச்னைகள் இருக்கின்றன ராஜாஜி இப் பிரச்னைகளை எப்படித் தீர்க்கப்போகின்றார் என்பதை இனித்தான் பார்க்கவேண்டும் அத்துடன் எல்லாவற்றையும்விட முக்கியமான முடிவான பிரச்னை இந்தியாவின் எதிர்காலமாகும். மேன்மை தங்கிய ராஜகோபாலாச்சாரியார் தானே கடைசி கவர்னர் ஜெனரலாக இருக்கவும் தனக்குப் பிறகு இந்தியக் குடியரசின் சட்டபூர்வமான தலைவர் எவரும் இங்கிலாந்திடம் விஸ்வாஸப் பிரமாணம் எடுக்கவேண்டிய அவசியமில்லாமல் செய்யவும் முயற்சிப்பாரென்றும் நாம் நம்பலாம். நம்முடைய மனப்பூர்வமான பிரார்த்தனையும் நல்லெண்ணமும் அவருக்கு உரித்தாகுக !

---


# ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா தொகை அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை

அதை ஆதரிப்பது
உங்கள் தேசீயக் கடமை.

மானேஜர், ஆஸாத். குடந்தை.

# சோஷலிஸ்டுகள் விரும்புவது சமுதாய பொருளாதாரப் புரட்சியே.

## அச்சுத பட்டவர்த்தன் விளக்கம்.

பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் சோஷலிஸ்ட் தலைவர் அச்சுதபட்டவர்த்தன் ஆகஸ்ட் 15-க்குப் பிறது இந்தியாவிலிருந்துவரும் நோக்கங்களை விளக்கினர், நடக்கவிருக்தும் ஐக்கிய மாகாண சட்டசபை இடைத் தேர்தல் சம்மந்தமாக ஆறு நாள் சுற்றுப்பிரயாணத்துக்காக பட்டவர்த்தன் இங்கு வந்தார்,

### சுதந்திரத்திற்குப் பிறகு

ஆகஸ்ட் 15-ல் பிரிட்டிஷ் ஆதிக்கம் முடிவடைந்த பிறகு சமுதாய புரட்சி சக்திகளின் அமைதியின்மை அதிகரித்தது. அதிகாரம் மக்கள் கைக்கு மாறக் கூடிய எந்த நடவடிக்கையையும் சோஷலிஸ்ட் கட்சி ஆதரித்திருக்கிறது அரசாங்க யந்திரமே இவ் வேலையை பூர்த்தி செய்யமுடியுமென்பது காங்கிரஸ் காரர்கள் காங்கிரஸ் சர்க்காரின் அபிப்பிராயம்.

### இரு அபிப்பிராயங்கள்

சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியர்களிடையே இரண்டுவித அபிப்பிராயங்கள் காணப்பட்டன பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியர்கள் கைக்கு அதிகாரம் மாற்றப்பட்டதே மிகப் பெரிய புரட்சி. மேற்கொண்டு புரட்சி அழிவையே கொடுக்கும் என்பது முதல் அபிப்பிராயம். அதிகாரமாற்றம் மட்டும் பெரிய மாறுதலல்ல. அதற்குப் பிறகு சமுதாய பொருளாதாரப்புரட்சி ஏற்படவேண்டுமென்பது இரண்டாவது அபிப்பிராயம். பெரும்பான்மை மக்கள் இரண்டாவது அபிப்பிராயத்தையே ஆதரிக்கின்றனர்.

### ராஜாஜியின் அபிப்பிராயம்

மேற்கூறிய இருவித அபிப்பிராங்களின் நடுவே காங்கிரஸ் நிற்கின்றது. நாட்டின் பாதுகாப்பு, நிர்மாணம் முதலிய இதர அரசாங்க கடமைகளின் சுமையின் கீழ் காங்கிரஸ் அழுந்தியிருக்கிறது. முதல் அபிப்பிராயத்தை ராஜகோபாலாச்சாரியார் 'ஒரே வழி'யில் வெளியிட்டிருக்கிறார். காங்கிரஸ் தலைவர்கள் அவர் அபிப்பிராயத்தையே நம்புகின்றனர். இரண்டாவது மகாத்மா காந்திஜியினுடையது. அது மக்கள் கைக்கு அதிகாரம் மாறுவதற்கு சமுதாய பொருளாதாரப் புரட்சியே சாதனம் என்பதை வற்புறுத்துகின்றது. காங்கிரஸின் இன்றைய போக்கு கொள்கை சம்மந்தப்பட்டவரை மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரஹ சரித்திரத்தை புறக்கணித்துவிடுவோமோவென்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

### செயலின் அவசியம்

சர்க்காரின் செயலின்மை மக்களுக்கு ஒரு சவாலாகும். மக்கள் கைக்கு அதிகாரத்தை மாற்றக்கூடிய எல்லா கிளர்ச்சிகளையும் சோஷலிஸ்டு கட்சி ஆதரிக்கும். சமுதாயப் புரட்சியே மக்களுக்கு நன்மை பயக்க முடியும் அதற்காக ஒரு பலமான எதிர்ப்பு கட்சி அவசியம் சோஷலிஸ்டுகள் ஒரு புதிய நாணயத்தை செலாவணி செய்திருக்கின்றனர் சமுதாயப் புரட்சி அவர்களுக்கு பிதுரார்ஜிதமாய் கிடைத்திருக்கிறது. இன்று இந்தியா நின்றுகொண்டிருக்கும் மைல் கல்லை விட்டு உடனடியாக முன்னேறவேண்டிய அவசியத்தை சோஷலிஸ்டுகள் உணருகின்றனர்.

### காங்கிரசிலிருந்து வெளியேறியது ஏன்?

சில முக்கிய அரசியல் மாறுதல்களே சோஷலிஸ்டுகளின் லட்சியம் பெரும் ஆர்ப்பாட்டங்களை அவர்கள் நம்புவதில்லை. சோஷலிஸ்டுகள் விரும்பும் மாறுதல்களை காங்கிரஸுக்குள்ளிருந்து கொண்டு செய்யமுடியாது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பிறகு எந்த கட்சியிலும் அபிப்பிராய பேதங்களுக்கு இடமிருப்பதில்லை. நெருக்கடியான இன்றைய நிலைமையில் சோஷலிஸ்டு கட்சி ஒரு முக்கிய கடமையைச் செய்துவருகிறது காங்கிரஸ் முடிவில் 'கோலிங்டான்' ஆகிவிடுமோவென்று அஞ்சுகிறேன். காங்கிரஸ் இடமளித்துவரும் சில சமூக சக்திகள் நாளுக்குநாள் பலமடைந்துவருகின்றன அதைக் கட்டுப்படுத்துவது காங்கிரஸுக்கே அசாத்தியமாகிவிட்டது.

(பாக்கி அடுத்த இதழில்)

உங்கள் வியாபாரம் விருத்தியடைய
ஆஸாதில்
விளம்பரம் செய்யுங்கள்.

# நெல்லை ஜில்லா முஸ்லிம் சகோதரர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

—[ K. M. ஷரீப், கும்பகோணம் ]—

வரும் 11—7—48-ந்தேதி உங்கள் ஜில்லாவில் காலியான சட்டசபை முஸ்லிம் ஸ்தானத்துக்கு இடைத்தேர்தல் நடக்கப் போகிறது. சென்ற தேர்தலின்போது முஸ்லிம் லீக் செய்த பிரசாரம் நீங்கள் அதற்குள் மறந்திருக்கமுடியாது. "இஸ்லாமுக்கு ஆபத்து; முஸ்லிம் சமூகம் அழிந்துவிடும்; முஸ்லிம் கலாசாரம், நாகரீகம், பாதுகாக்கப்பட வேண்டும்; முஸலிம்கள் தனிசமுதாயம் ; எனவே அவர்களுக்கு தனிநாடு வேண்டும் இந்தியாவின் பத்துக்கோடி முஸ்லிம்களை பாதுகாக்க பாகிஸ்தான் ஒன்றே பரிகாரம் இல்லையேல் பத்துக்கோடி முஸ்லிம்கள் ஹிந்துக்களின் அடிமைகளாகிவிடுவர்" என்றெல்லாம் பிரசாரம் செய்து முஸ்லிம் லீக் அபேக்ஷகர்கள் முஸ்லிம்களின் ஓட்டுகளை சேகரித்தது. உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவர்களுடைய பிரசாரத்தை நம்பி பாமர முஸ்லிம்கள் ஏன்! சில படித்தவர்களும்கூட தங்களுடைய மேலான ஓட்டுகளால் லீக் அபேக்ஷகர்களை தேர்ந்தெடுத்து சட்டசபைக்குள் அனுப்பிவைத்தனர் இஸ்லாமின் பெயரைக் கேட்டு ஓட்டுக்கொடுத்த முஸ்லிம் பொதுமக்களின் உணர்ச்சியை நான் கௌரவிக்கிறேன். ஆயினும் ஓட்டுகளை சேகரிக்கும் ஒரே நோக்கத்துடன் முஸ்லிம்களின் புனிதமான மத உணர்ச்சியை தவருனவழியில் பிரயோஜனப் படுத்திக்கொண்டு, தப்புபிரசாரம் செய்து பன்னிரெண்டு நூற்ருண்டுகளுக்கு மேலாக சகோதரர்களாக வாழ்ந்து வரும் ஹிந்து, முஸ்லிம்களிடையே மனக்கசப்பை உண்டாக்கிய லீக் லீடர்களின் செய்கையை மன்னிக்க முடியுமா ?

எப்படியும் லீக் அபேக்ஷகர்கள் M. L. A. பட்டங்களை வாங்கியாயிற்று ஆனல் அதன் விளைவுகளை இந்திய முஸல்மான்கள் என்றென்றும் மறக்கமுடியாது. நாலரைக்கோடி மைனரிடி முஸ்லிம்களின் ஓட்டு பலத்தால் பாகிஸ்தான் அமைந்தது. வகுப்புவாதத்தை தூண்டிவிட்டு ஓட்டுக்களை பறித்த லீக் லீடர்கள் இந்தியாவைவிட்டு மாயமாய் மறைந்தனர். லக்ஷக்கணக்கான நிரபராதிகள் கொல்லப்பட்டனர். கோடிக்கணக்கான மக்கள் வீடிழந்தனர். பல்லாயிரக்கணக்கான பெண்மணிகள் கற்பிழந்து, குழந்தைகள் அனுதைகளாகி, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் எரிந்து சாம்பலாய் குவிந்தன. கிழக்கு பஞ்சாபின் பதின்மூன்று ஜில்லாக்களிலுள்ள முப்பதினுயிரம் மசூதிகள் அல்லாஹ்வின் பெயரை உச்சரிக்கும் ஒரு முஸ்லிமைப்பார்க்க தவிக்கின்றன.

முஸ்லிம் லீகின் பிரசாரத்தால் பொதுவாக இந்தியாவுக்கும் குறிப்பாக நாலரைக்கோடி முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட நஷ்டத்தை அளவிடமுடியாது முஸ்லிம்களையும், இஸ்லாமையும் காப்பாற்றப் போவதாகச்சொல்லி முஸ்லிம்களின் ஓட்டுகளைப்பெற்று சட்டசபைகளுக்குள் பிரவேசித்த லீக் அபேக்ஷகர்கள் இதுவரை முஸ்லிம்களுக்காக சாதித்ததென்ன? என்பதை நெல்லை ஜில்லா முஸ்லிம்கள் சிந்தித்து பார்க்காமல் இருக்கமுடியாது. முஸ்லிம்களுக்காக இன்னது செய்தோம் என்று லீக் M. L. A. க்கள் விரலை மடக்கமுடியுமா ?

சட்டசபையில் லீக் அங்கத்தினராய் இருக்கும் வரை முஸ்லிம்களுக்கு எவ்வித சேவையும் செய்ய முடியாதென்று உணர்ந்து லீகிலிருந்து ராஜினுமா செய்த சென்னை சட்டசபை முஸ்லிம் அங்கத்தினர்கள் ஒன்பதுபேரையும் மெச்சுகிறேன். அவர்களுடைய நேர்மையை பாராட்டுகிறேன். அவர்களில் ஒருவரான வக்கீல் K. S. K. முஹம்மது ஹுஸைன் சாகிபுவின் காலிஸ்தானத்திற்கு யாரை தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுமென்பதை நீங்கள் சிந்தித்து முடிவு செய்யவேண்டும்.

இன்று இந்திய டொமினியன், பல மாகாண மந்திரி சபைகளில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை. எந்தெந்த மாகாணங்களில் காங்கிரஸ் முஸ்லிம்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்களோ அங்கெல்லாம் முஸ்லிம்கள் மந்திரிகளாகவும் இருந்து வருகிருர்கள். ஒத்துழைக்கமறுக்கும் முரண்பட்ட கொள்கையுள்ளவர்களை கூட்டுப்பொறுப்பில் வேலைசெய்யும் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள முடியாதென்பது வெளிப்படை.

இந்தியா பிரிந்து விட்டது பாகிஸ்தான் அமைந்துவிட்டது. இந்திய முஸல்மான்கள் பாகிஸ்தானுக்குப் போகப்போவதில்லை. பாகிஸ்தானும் நம் மீது கதவடைத்து விட்டது. போனவர்களும் திரும்பி வந்துகொண்டிருக்கின்றனர். இந்தியா நம் நாடு.

பதிமூன்று நூற்றாண்டுகளாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவரும் நம் தாயகம். இங்குள்ள முஸ்லிம் அல்லாதார் நம் தேசிய சகோதரர்கள் நம்முடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நம்முடைய இன்ப, துன்பங்களில் பங்கெடுத்துக்கொண்டு வந்தவர்கள். வியாபாரம், விவசாயம், தொழில், கல்வி முதலிய எல்லாத்துறைகளிலும் நாம் அவர்களுடன் இணைக்கப்பட்டிருக்கிறோம். புனிதமான எல்லாத்தொடர்புகளையும் அறுக்கும் விதத்தில் முஸ்லிம் லீக் மதத்தின் பெயரால் வேற்றுமைப் பிரசாரம் செய்து பரஸ்பர மனக்கசப்பை உண்டுபண்ணிவிட்டது. அதன் விளைவுகளை நிரபராதிகளான இந்தியர்கள் அனுபவித்துவிட்டனர். நாலரைக்கோடி இந்திய முஸல்மான்கள் அந்தகாரம் நிறைந்த எதிர்காலத்தைக் கண்டு திகைப்படையும் நிலைமைக்கு இலக்காகி விட்டனர். இன்னுமா முஸ்லிம் லீக்!

லீக் தலைவர்கள் செய்த தவறுகளுக்கு இனி பரிகாரம் செய்தாகவேண்டும். பாகிஸ்தானைப் பற்றிய கவலையோ, அனுதாபமோ இந்திய முஸல்மான்களுக்கு தேவையில்லை. பாகிஸ்தான் வாங்கிக்கொடுத்தாகிவிட்டது. இனி அவர்கள் முன்னேறினால் நாம் சந்தோஷப்படுவோம். அவர்களுக்காக இனியும் நம் தேசிய சகோதரர்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளமுடியாது. இந்நிலையில் நெல்லை ஜில்லா முஸ்லிம்கள் யாரை தேர்ந்தெடுப்பதென்பது மிக முக்கிய பிரச்னை. ஏற்பட்டுவிட்ட மனக்கசப்பை போக்குவதற்கு மகத்தானசந்தர்ப்பம் நெல்லை முஸ்லிம்களுக்கு கிடைத்திருக்கிறது. நடக்கப்போகும் இடைத்தேர்தலில் அவர்கள் யாரைத் தேர்ந்தெடுக்கப் போகின்றனர் என்பதையே பொருத்திருக்கிறது. வேற்றுமையைவளர்த்த லீகரை தேர்ந்தெடுப்பதா? அல்லது முஸ்லிம்களுக்காக உயிரை அர்ப்பணித்த உத்தமர்வீரத்தியாகி மஹாத்மா காந்தியின் கட்சியைச் சேர்ந்த V. S. T முகம்மது இப்ருஹிம் அவர்களை தேர்ந்தெடுப்பதா? என்று நெல்லை முஸ்லிம்கள் முடிவுசெய்தாகவேண்டும்.

இன்று இந்திய முஸல்மான்கள் லீகை ஆதரிக்கவில்லை என்பது நிச்சயம். ஆயினும் திருநெல்வேலியில் நடக்கப்போவதை இந்தியா எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. பழைய மனப்பான்மையை விட்டு நவ இந்தியாவில் புதிய ஒற்றுமை உணர்ச்சியுடன் முஸ்லிம்கள் ஒத்துழைக்க தயாராய் இருக்கின்றனர் என்று உலகுக்கு அறிவிக்க வேண்டுமாயின் காங்கிரஸ் அபேக்ஷகர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். காங்கிரஸ் வெற்றிபெறுவதால் காந்திஜியின் லட்சியம் வெற்றியடையும். காந்திஜியின் லட்சியம் வெற்றியடைந்தால் முஸல்மான்கள் இந்தியாவில் நிம்மதியாக வாழவழியேற்படும். காங்கிரஸ் தோற்றால் காந்திஜியின் லட்சியம் தோற்கும். காந்திஜியின் லட்சியம் தோற்றால் அவரை சுட்டுக்கொன்ற சக்தி பலமடைந்துவிடும். அதன்பிறகு இந்தியாவில் முஸல்மான்களின் கதிஎன்னவாக இருக்குமென்று எண்ணிப்பார்க்கவும் மனம் துணியவில்லை.

நாம் காங்கிரஸை ஆதரித்தால் காங்கிரஸ் நம்மை பாதுகாக்கும். நாம் காங்கிரஸை தோற்கடித்துவிட்டு காங்கிரஸ் நம்மை பாதுகாக்க வேண்டுமென்று நினைப்பது புத்திசாலித்தனமல்ல.

லக்ஷக்கணக்கான நிரபராதிகளை பலிவாங்கி நாலரைகோடி முஸ்லிம்களை அனாதைகளாக்கிய வகுப்புவாத லீகை இன்னும் ஆதரித்து தேசிய சகோதரர்களின் வெறுப்பை மேலும் சம்பாதித்துக் கொள்ளாமல் 11—7—48-ந்தேதி நடக்கவிருக்கும் தேர்தலை தங்களுடைய நல்லெண்ணத்தை அறிவிப்பதற்கான சந்தர்ப்பமாகக்கருதி ஜனாப் V. S. T. முஹம்மது இப்ருஹீம் அவர்களை தேர்ந்தெடுக்குமாறு நெல்லை ஜில்லா முஸ்லிம்களை வேண்டுகிறேன்.

## தமிழா விழி!
## தமிழா உழை!!

[ஷேக்பீர், கள்ளிடைக்குறிச்சி.]

உதயம் தெளி, தமிழா விழி!
உதவாதினி துயிலே.
உழுவாய்! பயிரிடுவாய்! மிக
உணவூதிய முறுவாய்!
மதியால் பல தொழில் தேர்! பெரும்
மலை போலரும் பொருள் சேர்!
மடியால் குடி கெடுமே அதை
அடியோடு நீ விடுவாய்!
தனி நூல் பல இனிதாகவே
தருவாய்! புகழ் பெறுவாய்!
தமிழே புவி முழுதும் கொள
தகையாய், பணி புரிவாய்!
கலமே விடு! கலையே வளர்!
கடலேயென படை சேர்!
கடவுள் நினை! கவிதை புனை
கருணை நிறை தமிழா!

# எல்லேப்புர காந்தி
# பாதுஷாகான் கைது.

நாடு விடுதலையடைந்தது; இந்தியா பாகிஸ்தான் டொமினியன்கள் ஏற்பட்டன. ஆயினும் அன்னிய ஆதிக்கத்திலிருந்து நாட்டுக்கு விடுதலே வாங்கிக் கொடுப்பதற்காக தங்கள் வாழ்க்கைகளையே அர்ப்பணித்திருந்த அநேக உத்தமர்கள் இன்று இரும்புக் கம்பிகளுக்குப்பின்னுல் கிடக்கின்றனர். இது காலத்தின் விபரீதப் போக்கல்லவா? எல்லேப்புரத்தின் பிரபல தலைவர் பாதுஷாகானும் அவரது சகாக்களும் சமீபத்தில் கைது செய்து சிறை வைக்கப்பட்டதே இதற்குப் போதிய அத்தாட்சியாகும்.

நம் சுதந்திரப் போராட்டத்தின் கமாண்டர்களில் கான் பாதுஷாவும் ஒருவர். இந்திய சுதந்திர சிற்பிகளில் தலே சிறந்தவர். கொள்கை, நேர்மை, ஒழுக்கத்தை கண்டிப்பாக பின்பற்றுவதில் அவரைப் போல் ஒரு சிலரையே பார்க்கமுடியும். சுதந்திரப் போராட்டத்தில் எல்லேப்புரத்தின் சரித்திரமும், பாதுஷாகான் அரசியல் வாழ்க்கையும் ஒன்றே. ஆவேசம் மிகுந்த பட்டாணியர்களுக்கு அஹிம்சையை உபதேசித்து கட்டுப்பாடான ஒரு ஜாதியினராக மாற்றும் அசாத்தியமானதொரு காரியத்தை பாதுஷாகான் சாதித்துக் காட்டினர். மற்றவர்களுக்கு உபதேசிப்பதை தானும் இம்மியளவுகூட தவருது கடைப்பிடித்து நடப்பவர். எல்லே காந்தி அன்னிய ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிகளில் மட்டுமின்றி தன்னுடைய அரசியல் எதிரிகள் விஷயத்திலும் [முக்கியமான எதிரி முஸ்லிம் லீக்] அஹிம்சையை விட்டுக்கொடுக்காதவர். பண்டித ஜவஹர்லால் நேருவின் எல்லேப்புர சுற்றுப் பிரயாணத்தின்போது குண்டர்களின் பலாத்கார நடவடிக்கைகள் மானிட சகிப்புத்தன்மையின் எல்லேகளேக்கடந்து போய்விட்ட சமயத்திலும் அவரது சிஷ்யர்கள் அஹிம்சையை விட்டுக்கொடுக்கவில்லே. அன்று எல்லேயில் கான் சாஹிப் மந்திரிசபை இருந்துவந்தது. விரும்பியிருந்தால் அதிகாரத்தைக்கொண்டு அடக்கி யிருக்க முடியும். பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகும் இதுவரை அவர் தன்னுடைய கொள்கையிலிருந்து இம்மியளவும் தவறியதில்லே.

இந்நிலேயில் பாகிஸ்தானேக் கவிழ்ப்பதற்காகப் பலாத்கார கிளர்ச்சியைத் தூண்டிவிடுவதில் முனேந்திருந்ததாகவும் அதற்காக இப்பிபக்கிரியைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்ததாகவும் குற்றம் சாட்டுவது கொண்டிச் சமாதானமேயாகும். அதை எந்த ஒரு அறிவுள்ள மனிதனும் ஒப்புக்கொள்ளமுடியாது.

கேட்பாரற்று மூலேயில் கிடந்த தன்னே அரசியல் அரங்கத்தில்கொண்டுவந்து நிறுத்திய பாதுஷாகான் எது வேண்டுமானுலும் ஆகலாம். ஆனுல் பலாத்காரத்தை விரும்பும் கிளர்ச்சிக்காரன் மட்டும் ஆக முடியாதென்று எல்லேப் பிரதமர் அப்துல் கையூம்கான் நன்ருக அறிந்தேயிருக்கிருர். சில வருஷங்களுக்கு முன்வரை பாதுஷாகான் தலைமையைக் குறித்துப் பெருமைப்பட்டதை எல்லேப் பிரதமர் அதற்குள் எப்படி மறந்திருக்கமுடியும்.

பாதுஷாகான் இன்றைய பாகிஸ்தான் அதிகார வர்க்கத்தைக் கவிழ்க்க முயன்றிருக்கலாம். இன்றைய அரசியல் போக்கையே மாற்றியமைப்பதற்காக துணிந்திருக்கவும்கூடும். ஆயினும் தன்னுடைய லட்சியங்கள் பூர்த்தியாவதற்காக அமைதியான சட்டபூர்வமான நடவடிக்கைகள், சத்தியாக்கிரக வழிகளேவிட்டு ஆயுதம் தாங்கிய பலாத்கார கிளர்ச்சியை மேற்கொள்வதென்பது எல்லே காந்தியால் முடியாத காரியம்.

இப்பிபக்கிரியை சந்திப்பதற்காகப் போய்க்கொண்டிருந்தார் என்று சொல்லப்படுவது உண்மையென்றே வைத்துக்கொண்டாலும் ஆங்கில ஆட்சி இப்பி பக்கிரிக்கு விதித்திருந்த தடைகள் அனேத்தையும் பாகிஸ்தான் அரசாங்கமே நீக்கியிருக்கையில் இப்பி பக்கிரியை சந்திக்கப்போவது எப்படி குற்றமாக முடியுமென்று புரிந்துகொள்ள முடியவில்லே. எனவே எல்லேப்புர சர்க்கார் பாதுஷாகானே கைது செய்ததற்கு காட்டியிருக்கும் காரணங்களும் சாட்டியிருக்கும் குற்றங்களும் கேலிக்கூத்தானவை; அர்த்தமற்றவை.

பாகிஸ்தானே கவிழ்க்க முயற்சித்தாகவும், பாகிஸ்தான் எதிரிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததாகவும், பாகிஸ்தானிடம் விஸ்வாசமிருப்பதாக அளித்த உறுதிமொழிகளெல்லாம் வெறும் வெளிவேஷமென்றும், பாகிஸ்தான் ஏற்பட்டதிலிருந்து இதுவரை பாதுஷாகான் நாச வேலேகளில் ஈடுபட்டிருந்தாரென்றும் சர்க்கார் அறிக்கையிலிருந்து வெளிப்படுகிறது.

எவ்வித ஆதாரமுமின்றி எல்லை காந்தியைப் போன்ற மாபெரும் தலைவர்மீது இம்மாதிரி பழி சுமத்துவது வெட்கங்கெட்ட செய்கையாகும். பொது மக்களின் எதிரொலியால் ஏற்படக்கூடிய விளைவுகளை லட்சியம் செய்யாமல் தன்னுடைய போக்கிலே போய்க்கொண்டிருக்க தீர்மானித்துவிட்ட ஒரு சர்க்காரிடமே இவ்வித நடவடிக்கைகளை எதிர்பார்க்க முடியும்.

பாதுஷாகான் அவ்வளவு பெரிய துரோகி என்பது உண்மையானுல், அவர் செய்த விஸ்வாஸப் பிரமாணங்கள் வெறும் வேஷம் என்பது வாஸ்தவமானுல் எல்லைப் பிரதமர் கான் அப்துல் கையூம் இடைக்கால சமரசத்திற்காக அவரை ஏன் விண்ணப்பிக்கவேண்டும்? காய்தே ஆஜம் மிஸ்டர் ஜின்னு லீகில் சேரும்படி பாதுஷாகானை எதற்காக வேண்டிக்கொள்ளவேண்டும்? பாதுஷாகான் லீகில் சேரும்படி மிஸ்டர் ஜின்னு விடுத்த வேண்டுகோளை ஏற்று தன்னுடைய தனி கட்சியை வற்புறுத்தாமல் மட்டும் இருந்திருந்தால் அவர் எவ்விதம் பாகிஸ்தான் விஸ்வாசியாக இருந்திருப்பார் என்பதை கான் அப்துல் கையூம் விளக்க முடியுமா? பகிரங்க எதிரியின் எதிர்ப்பைவிட நண்பனுக நடிக்கும் எதிரி அபாயகாமானவன் என்பது வெளிப்படை.

ஆனுல் கையூம் கானும் மிஸ்டர் ஜின்னுவும் விஷயத்தை உணரமுடியாத அவ்வளவு முட்டாள்களல்ல. எனவே அவர்கள் பாதுஷாகானை தேசத்துரோகி என்ற அடிப்படையில் கைது செய்யவில்லை. சர்க்காரின் எதிரி என்ற அடிப்படையிலேயே கைது செய்திருக்கின்றனர். கேவலம்! மண்ணினுல் படைக்கப்பட்ட ஒரு மானிடன் தம் ராஜாங்க உத்திரவுகளை நிறைவேற்றுதிருக்கத் துணிவதா! தம் அழைப்பை அவமதித்து எதிரி என்ற ஹோதாவில் மார் தட்டி அணி வகுத்து நிற்கப்போவதாக அறிவிப்பதா! என்று மிஸ்டர் ஜின்னுவுக்கு கோபம் இருக்கலாம். பாதுஷாகானுடன் ராஜி முயற்சியில் தோல்வி யடைந்த கோபத்தால் பிறகு பெஷாவர் பொதுக்கூட்டத்திலேயே மிஸ்டர் ஜின்னு கேவலமான முறையில் பாதுஷாகானை தாக்கிப் பேசியிருந்தார். முதல் நாள் பாகிஸ்தானைப் பலப்படுத்த தன்னுடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொண்டிருந்த அதே மனிதனுக்கு மறு நாள் மிஸ்டர் ஜின்னு துரோகி என்ற பட்டத்தைக் கொடுத்தார்.

பாகிஸ்தானில் காய்தே ஆஜமின் கோபம் ஆண்டவனுடைய சாபத்தைவிட குறைத்து மதிப்பிடப்படுவதில்லை. பெஷாவர் கூட்டத்தில் பாதுஷாகான் மீது மிஸ்டர் ஜின்னு சீரியவுடனே எல்லா சிறிய, பெரிய லீக் பீரங்கிகளும் பட்டாணிய வீரனை நோக்கி சுட ஆரம்பித்துவிட்டன. மேடை பிரசங்கிகள் அனலைக் கக்க ஆரம்பித்தனர். பத்திரிகைகள் விஷத்தைக் கக்கின. கையூம்கான் தன்னுடைய பழைய தலைவரையும், வழிகாட்டியையும் சிறைக்குள் தள்ளி தன்னுடைய அதிகார தோரணையைக் காட்டிவிட்டார். கைது செய்யப்பட்ட அன்றே பாதுஷாகானுக்கு மூன்று வருஷ கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. அதன்மூலம் முன்கூட்டியே போடப் பட்டிருந்த திட்டப்படி காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதும் அரசாங்கத்துக்கு முறைப்படி நடவடிக்கை நடத்தி தன்னுடைய குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் துணிச்சலில்லை என்பதும் அம்பலமாய்விட்டது.

பாதுஷாகான் சகாக்களை மட்டுமின்றி தங்களுடைய பாஸிஸத்தையும், சர்வாதிகாரத்தையும் அம்பலப்படுத்தத்துணியும் எல்லா சக்திகளையும் ஒடுக்கவே பாகிஸ்தான் பாஸிஸ்டுகள் விரும்புகின்றனர். பீபிள்ஸ் பார்ட்டியை ஏற்படுத்தி லீகை எதிர்க்கத் துணிந்ததே பாதுஷாகான் செய்த குற்றம். காய்தே ஆஜமின் அன்புக்குப் பாத்திரமான உலாம் ஹுஸைன் ஹிதாயதுல்லாவின் உத்திரவுக்கு கீழ்படிய மறுத்ததே மிஸ்டர் குர்ரோவின் பாபம். மைனுரிடி பிரச்னையில் பாகிஸ்தான் கொள்கையிலிருந்து வரும் குறைகளைப் போக்க முயற்சித்த பாபத்துக்காக மிஸ்டர் சுஹ்ரவர்த்தி காவலில் வைக்கப்பட்டார். பாஸீஸத்தின் நிர்வாணக்கூத்து இதைவிட வேறு என்ன இருக்க முடியும். இந்திய சுதந்திரத்திற்காக உழைத்தவர்கள் மட்டுமின்றி பாகிஸ்தானைப் பெறுவதற்காக முன்னணியிலிருந்து முயற்சித்தவர்களும் இன்று பாகிஸ்தான் பாஸிஸ்டுகளின் அக்ரமங்களுக்கு இலக்காகியிருக்கின்றனர். சுகபோதங்கள், பித்தலாட்டங்கள், தேசத் துரோகங்கள் செய்வதிலேயே வாழ்க்கையைக் கழித்த வீணர்கள் கொம்மாளமடிக்க! தேசபக்தர்கள் சிறைக்கூடங்களில் கிடந்து வாட! என்னே! காலத்தின் மாறுதல்!

## மணப்பாரை.

### தேசிய முஸ்லிம் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மணப்பாரை பஞ்சாயத்து போர்டு 5-வது வார்டில் காலியான முஸ்லிம் தொகுதி மெம்பர் ஸ்தானத்திற்காக 17—6—48 தேதியில் நடந்த உப தேர்தலில் வியாபாரியும் குளித்தலை தாலுகா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியுமான ஜனுப். S. A. சத்தார் அவர்கள் போட்டி அன்னியில் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று குளித்தலை தாலுகா காங்கிரஸ் கமிட்டி தலைவர் M. அஹமத் ஷரீப் சாயபு அறிவிக்கிறுர்.

# முஸ்லிம்களும் அறியாமையும்

கோபம், பதட்டம், தீவிரம் முதலியவைகளுக்கு மாறான பொறுமை, தன்னடக்கம், சகிப்புத்தன்மை ஆகிய குணங்களே உலகில் புகழுக்குரியவை, என்பதை நாம் அறிவோம். சாதுர்யமான இனிய வார்த்தைகள், நளினம், புன்னகை ஆகியவைகளுக்கே மனிதர்களின் உள்ளங்களில் செல்வாக்குண்டென்பதும் நமக்குத்தெரியும். நற்குணங்களை மதிப்பது போல் கோபம், பதட்டம் முதலிய துர்க்குணங்களை எவரும் மதிக்கமாட்டார்களென்பதும் உண்மையே. ஆயினும் சில சந்தர்ப்பங்களில் கோபம் அடக்கமுடியாத நிலைமையை அடைந்து விடுகின்றது. இன்னும் சில சமயங்களில் கோபம் மேலிட்டு கொடூரமான முறையில் பேசும்படியாயும் ஏற்பட்டுவிடுகின்றது.

உதாரணமாக மதத்தை அறியாதவர்கள். முற்றுமுணர்ந்தவர்களாக தங்களை பறைசாற்றிக்கொள்வார்களாயின் அவர்களது கூற்றை அறிந்தவர்களுக்குக் கோபம் வராதிருக்க முடியுமா? வைத்திய சாஸ்திரத்தையே அறியாத நோயாளி தன்னை பெரிய வைத்தியனென்று சொல்லிக்கொள்வதற்கொப்பாக இஸ்லாமையறியாது பெரும் பிணியில் சிக்குண்டிருக்கும் துஷ்டர்கள் தங்களை மத ஞானமுள்ளவர்களெனப் பகர்ந்து திரிவதையும் இஸ்லாமல்லாதவைகளெல்லாம் இக் கொடியவர்கள் இஸ்லாமென்று பிதற்றுவதையும் அறிந்தவர்கள் சகித்துக்கொண்டிருப்பது உண்மையில் குற்றமல்லவா? மனிதர்களின் அறியாமையால் நிகழும் கொடுமைகளைக் கண்டு மவுனமாயிருக்கக்கூடுமாயினும், இஸ்லாமை அறியாத மடையர்கள் தாங்கள் இஸ்லாமை முற்றிலும் அறிந்துவிட்டதாய்க் கூறிப் பகட்டும்போது என்னுடைய நாவும் எழுதுகோலும் சகித்துக்கொண்டிருக்க முடியாது-

ஒருவன் மடையனாக இருப்பதைக் குறித்து எவருக்கும் கோபம் வராதிருக்கலாம். ஆனால் அறியாத ஒருவன் அறிந்தவனைப்போல் வேஷம் போட்டு அலைவதைப் பார்த்து கோபம் வராதிருக்க முடியுமா? அறியாமையைக்கூட ஒருவகைப் பாவமென்று தீர்மானிக்க வேண்டியிருக்கையில் அறியாதவன் அறிந்தவனைப்போல் நடிப்பதை ஷைத்தானின்சேஷ்டையென்றே சொல்லவேண்டும். இதை சாமான்ய பாவமெனக் கருதமுடியாது. ஷைத்தானின் சேஷ்டை புரிபவர்களுக்கு உலகில் இழிவும் கேவலமுமே கூலியாக இருக்கமுடியும்.

நம்முடைய துரதிர்ஷ்ட செய்கைகள் நமக்கு அனேக கேடுகளை சேகரித்துவிட்டன. சமூகத்தின் உண்மையான இயற்கையான தலைவர்கள் மதத்தைக் கற்றுணர்ந்த உலமாக்களல்லவா? முஸ்லிம்களின் இக, பர வாழ்க்கை சிறப்புறுவதற்கு திரு குர் ஆன் ஒன்றே ஏற்ற சாதனம் என்றிருக்கையில் திரு குர்-ஆனின் உண்மையான ஞானமுள்ள உலமாக்களே முஸ்லிம்களின் வைதீக, லௌகீக தலைவர்களாயிருக்க முடியும்.

நம் மூளைகளில் நல்லுணர்ச்சியில்லை. நொண்டிகளாக இல்லாமலிருப்பினும் நம் மூளைகளிலிருந்து சிந்தனா சக்தி பறந்துபோய்விட்டது உலமாக்கள் தங்கள் கடமையைச் செய்யப் பின்வாங்கி வழி தவறியதால் மற்றவர்களும் வழி கெட்டுப்போயினர்.

இன்று முஸ்லிம்கள் இடையனற்ற ஆட்டுமந்தையைப்போல் ஜீவிக்கின்றனர். முஸ்லிம்களுக்கு பல புதிய தலைவர்கள் தோன்றிவிட்டார்கள். அத்தலைவர்களின் மடமையும் சுயநலமும் இடும் கட்டளைகள் யாவும் இஸ்லாமின் கட்டளைகளாம்! பேனாவைப் பிடித்த ஒவ்வொருவனும் தன்னை ஷைகுல் இஸ்லாமென்றும், ஒவ்வொரு பத்திரிகாசிரியனும் தன்னை திரு குர்-ஆனின் வியாக்கியான கர்த்தாவென்றும் பறைசாற்ற வெட்கப்படாத இந் நாட்களில் ஒவ்வொரு ஆங்கிலங் கற்றவனும், பட்டதாரியும் காரியதரிசியும், முதவல்லியும் தங்கள் அறியாமையால் சாற்றும் யாவற்றையும் இஸ்லாமென்றும், இஸ்லாமிய அறிவென்றும், இஸ்லாமிய ஞானமென்றும், இஸ்லாமின் விளக்கமென்றும் பிதற்ற அருகதையுள்ளவர்களாகிவிட்டனர்.

---

## வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக, சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.

**மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.**

## பிரிட்டிஷ் ஆட்சியை வெளியேற்றினேம்.

# இன்றைய பாகிஸ்தான் நிர்வாகிகள் எம்மாத்திரம்

### பாதுஷாகான் போர் முழக்கம்.

"நம்மைச்சுற்றி பாகிஸ்தான் லீடர்கள் எழுப்பியிருக்கும் மணல் மதில்களை தகர்த்தெரிய பட்டாணியர்கள் ஒன்றுபட்டு வீறுகொண்டெழவேண்டும். பட்டாணியர்களுக்காக பட்டாணியர் ஆட்சி. அதாவது பட்டாணிஸ்தான் ஏற்படுத்தாதவரை நாம் நிம்மதியுடன் இருக்கமாட்டோம்" என்று பர்தான் ஜில்லாவைச்சேர்ந்த நூவ்டேர் என்ற இடத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் எல்லைப்புர செஞ்சட்டைத் தலைவரும் எல்லைக்காந்தியுமான பாதுஷாகான் முழங்கினர்.

அவர் மேலும் பேசுகையில் "இன்று பாகிஸ்தான் நிர்வாகிகளிடம் நாம் அனுபவித்துவரும் துன்பங்கள் ஆங்கில ஆட்சியில் சகித்துவந்த துன்பங்களைவிட எத்தனையோ மடங்கு அதிகமானவை. பாகிஸ்தான் நம்முடன் நடந்துகொள்ளும் முறை சகிக்க முடியாததும் கேவலமானதுமாகும். பிரிட்டிஷாரும் இவ்வளவு கேவலமாக நம்முடன் நடந்து கொண்டதில்லை.

பாதுஷாகான் தன்னுடைய கராச்சி சுற்றுப் பிரயாண அனுபவத்தைக் குறிப்பிடுகையில், "மக்களின் அனுதாபம் பெற்ற பலூஜிஸ்தான் தலைவரான சிறை தண்டனை அனுபவித்துவரும் கான் அப்துல் ஸமத்கானைத் தவிர இதர எல்லா பாகிஸ்தான் மாகாணங்களின் தலைவர்களையும் சந்தித்தேன். புதிய அரசியல் பொதுமக்களின் உரிமைகளுக்காகப் போராட நானும் மற்ற தேசிய முஸல்மான்களும் சேர்ந்து உருவாக்கியிருக்கும் புதிய ஸ்தாபனத்தின் அவசியத்தையும் லட்சியங்களையும் அவர்களுக்கு விளக்கினேன். புதிய கட்சிக்கு 'பீபிள் ஸ்பார்ட்டி' என்றிருந்த ஆங்கிலப்பெயரை நீக்கி 'ஜமீயதுல் அவாம்' (மக்கள் கட்சி) என்று பெயரிடப்பட்டிருக்கிறது இதுவரை போராடி வந்ததும் பாகிஸ்தான் ஏற்படுவதற்கு முன் உறுதியளிக்கப்பட்டதுமான உரிமைகளைப் பெறுவதற்காக இக் கட்சி கடைசிவரை போராடும்" என்றுர்.

### பிரஜா உரிமை.

பாகிஸ்தானில் பிரஜா உரிமையைக் குறித்துப் பேசுகையில் "நம்முடைய பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. நாம் பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தவும் முடியாத நம்முடைய பிரபல ஊழியர்கள் சிறைக் கம்பிகளுக்குப் பின்னுலிருக்கின்றனர். இவ் விஷயங்களை பாகிஸ்தான் பிரதமர் மிஸ்டர் லியாகத் அலிகான் இடம் நான் அறிவித்தபோது அவர் எல்லாவற்றையும் அடியோடு மறுக்கிறுர். பாகிஸ்தானில் ஒரு லீடர் எவ்வளவுக் கெவ்வளவு பொறுப்பு வாய்ந்தவனுக இருக்கின்றுனே அவ்வளவுக்கவ்வளவு பொய்யனுகவும் இருக்கின்றுன்" என்று குறிப்பிட்டார்.

### ஓடிவந்த தலைவர்கள்.

நான் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையின் வேடிக்கையும் பார்த்தேன் பாகிஸ்தான் லீடர்களுக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் யதேச்சாதிகார அதிகாரிகளுக்கும் கொஞ்சமும் வித்தியாசமுமில்லை பாகிஸ்தான் ஏற்பட்டு இன்னும் அதிக நாட்கள் ஆகிவிடவில்லை என்ற கேலிக் கூத்தான காரணத்தைக் காட்டி தங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் பார்க்கின்றனர். இந்தியாவைப் பாருங்கள். நெருக்கடியான, 'கொந்தளிப்பான நிலைமையிலும் இந்தியத் தலைவர்கள் அரசாங்கக் கப்பலை நடத்தியிருக்கின்றனர். அவர்கள் தங்கள் புது அரசியலை உருவாக்கிக் கொண்டார்கள். ஆயினும் இதுவரை பாகிஸ்தான் ஒன்றுமே செய்யவில்லை என்றுதான் நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன்

இதனுல் பாகிஸ்தான் லீடர்கள் ஜன நாயகத்தை கண்டு மிரளுகின்றனரென்பதை யாரும் தெரிந்து கொள்ள முடியும். அவர்கள் தான்தோன்றித்தனமாக காரியங்களை செய்துவருகின்றனர். பாகிஸ்தானை தங்கள் சொந்த ஜாகீராக நினைப்பதாகத்தோன்றுகிறது. அவர்கள் அனைவரும் ஓடிவந்த லீடர்கள் என்பது வருந்தத்தக்க விஷயமாகும். அவர்களுடைய தாயகம் பாகிஸ்தானல்ல."

### இந்தியாவும் பாகிஸ்தானும்.

கவர்னர் ஜெனரல் என்ற முறையில் மிஸ்டர் ஜின்னு பாகிஸ்தான் முஸ்லிம்களின் பிரதிநிதியல்ல. அவர் பிரிட்டிஷ் அரசரால் நியமிக்கப்பட்டவர். இந்நிலையில் அவர் பிரிட்டிஷாருக்கு பதிலளிக்க வேண்டியவரேயொழிய முஸ்லிம் சமூகத்துக்கல்ல.

## கும்பகோணம் தாலூக்காவில்

# தஞ்சை ஜில்லா 3-வது நிர்மாண ஊழியர்கள் பயிற்சி முகாம்

தஞ்சை ஜில்லா நிர்மாண ஊழியர்கள் சங்கத் தலைவர் ஸர்தார் அ. வேதரத்னம் பிள்ளை M L. A. அவர்கள் கீழ்வருமாறு அறிவிக்கிறார்.

ஜில்லா நிர்மாண ஊழியர்கள் சங்கம் தாலூக்கா தோரும் நிர்மாண ஊழியர்கள் பயிற்சி முகாம் ஆரம்பித்து ஊழியர்களை நல்லமுறையில் தயாரித்து கிராமங்களை நிர்மாண வேலையில் தயார் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்திற்கு இணங்க இச் ஜில்லாவின் மூன்றாவது நிர்மாண ஊழியர்கள் பயிற்சி முகாம் கும்பகோணம் தாலூக்கா துயிலி என்ற கிராமத்தில் நடத்த ஏற்பாடாகி வருகிறது. இதற்குமுன் முதல் பயிற்சி முகாம் திருத்துரைப்பூண்டி தாலூக்கா வேதாரண்யம் மகாராஜபுரத்திலும், இரண்டாவது முகாம் மாயவரம் தாலூக்கா திருவாடுதுறை இலட்சத்தோப்பிலும் நடந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்

அதே முறையில் பயிற்சி சுமார் ஒன்றரை மாத காலம் நடக்கும். பயிற்சி அளிக்கப்படும் விஷயங்கள் காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்கள் 22-ம் குறிப்பாக பஞ்சலறைத்தல், பஞ்சு வெட்டுதல், நூற்றல், சுகாதாரம் முதலிய கிராமக் கைத்தொழில்களில் முக்கிய கவனம் செலுத்தப்படும் பயிற்சியாளர்கள் பயிற்சி முடியும்வரை முகாமிலே தங்கி இருக்க வேண்டும். பயிற்சி முகாமிலே உணவுமுதலிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும். பயிற்சியாளரைத் தேர்ந்தெடுப்பதில் கும்பகோணம் தாலூக்காவில் இருந்து வருபவர்களுக்கே முதல் சலுகைகாட்டப்படும். பயிற்சி யாளராக சேரவிரும்புவோர் டாக்டர் மஹாலிங்க ஐயர், ராமா கண்ணாஸ்பத்திரி, கும்பகோணம் என்ற விலாசத்திற்கு எழுதி மேற்கொண்டு விவரங்கள் அறிந்து கொள்ளலாம்.

வேதாரண்யம்,<br>21—6—48. (ஒப்பம்) அ வேதரத்னம்.

---

பாகிஸ்தான் மந்திரிகள் இந்திய மந்திரிகளைவிட இரட்டிப்பு சம்பளத்தைப் பெறுகின்றனர் இந்திய ஆங்கில கவர்னர் ஜெனரலைவிட பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் அதிகமான சம்பளத்தை பாகிஸ்தான் கஜானாவிலிருந்து வாங்குகிறார்

இந்தியாவுக்கு மாறாக பாகிஸ்தான் பிரிட்டிஷாரின் வாசஸ்தலமாக மாறி வருகிறது. இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட பிரிட்டிஷார் பாகிஸ்தானில் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

### ஷரீயத் அரசியல்.

இன்று உங்களுக்கு ஒரு விஷயத்தை அறிவித்து விடுகிறேன். நீங்கள் நீண்ட நாட்களாக இஸ்லாமிய ஆட்சியென்றும் திரு குர்-ஆன் சட்டங்களென்றும் கோஷித்து வருகின்றீர்கள். அதற்காக உங்களில் அநேகர் தியாகங்களையும் செய்திருக்கின்றனர். பாகிஸ்தானில் என்றுமே அவ்வித ஆட்சி ஏற்படப்போவதில்லை. உங்கள் தலைவர்கள் அதற்குத் தயாராயில்லை. அப்படிச்செய்வதால் தங்களுடைய தலைமைக்கு ஆபத்து வந்துவிடுமென்று அவர்கள் பயப்படுகிறார்கள்.

### தயாராக இருங்கள்,

என்னுடைய பட்டாணிய சகோதரர்களே! நீங்கள் பாகிஸ்தானின் டங்காளிகள். காலில் ஒரு பங்கு உங்களுக்குச் சொந்தமென்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். ஒன்றுபட்டு நின்று உங்கள் உரிமையைப் பெறுவது உங்களைப்பொருத்தேயிருக்கிறது உரிமைகளைப்பெற உறுதி கொள்ளுங்கள். ஒன்று படுங்கள். தீர்மானமாக முன்னேறுங்கள். பாகிஸ்தான் லீடர்கள் உங்களைச்சுற்றி எழுப்பியிருக்கும் மணல் மதில்களை தகருங்கள்.

நாம் பிரிட்டிஷாருடன் நடத்திய போரில் ஒரு அங்குலமும் பின்வாங்கவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. முடிவில் அவர்களை வெளியேற்றுவதில் வெற்றியடைந்தோம். இன்றைய பாகிஸ்தான் நிர்வாகிகள் நமக்கு எம்மாத்திரம். நம்முடைய பொறுமை எல்லைகடந்துவிட்டது. நாம் நீண்ட நாட்சுள் பொறுத்து இருக்கிறோம். இன்றைய நிர்வாகத்தை இனியும் சகித்துக்கொண்டிருப்பதற்கில்லை வரிந்து கட்டி பட்டாணியர்களின் லட்சியத்தை நோக்கி முன்னேறுங்கள். உங்கள் லட்சியத்துக்காக மாபெரும் தியாகங்களை செய்திருக்கின்றீர்கள். எல்லையற்ற துன்பங்களை சகித்திருக்கின்றீர்கள். பட்டாணியர்களுக்காக பட்டாணிய ஆட்சி. அதாவது பட்டாணிஸ்தான் ஏற்படுத்தாத வரை நாம் நிம்மதியுடன் இருக்கமாட்டோம்."

# முகல் ஆட்சியை கவிழ்த்த ஹைதராபாத்.

( மிஸ்டர் இக்பால் அஹ்மத் B. A. பம்பாய். )

ஹைதராபாத் எப்பொழுதுமே துரோகிகளின் இருப்பிடமாக விளங்கி வந்திருக்கிறது. இந்தியாவில் முகல் ஆட்சி மறைந்து ஆங்கில ஆட்சி ஏற்படுவதற்கு ஹைதராபாத் நிஜாம்கள் செய்த துரோகச்செயல்களே பெருமளவுக்குக் காரணம் என்று சொல்லுவது மிகையாகாது முகல் மத்திய ஆட்சியால் ஆஸிப் ஜாஹ் ஹைதராபாத் சுபேதாராக நியமிக்கப்பட்டான். முகல் ஆட்சி ஒடுங்கிவரும் சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டு 1749-ல் சுதந்திரப் பிரகடனம் செய்து ஆஸிப் ஜாஹ் ஏதேச்சாதிகாரியாக மாறிவிட்டான். அவனுடைய துரோகத்தால் முகல் ஆட்சி மேலும் க்ஷீணித்து மறைந்தே விட்டது.

இந்தியாவில் மராட்டியர்களுக்கும், திப்பு சுல்தானுக்கும் எதிராக பிரஞ்சுக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு முதன் முதலாக சதி செய்த சமஸ்தானம் ஹைதராபாதேயாகும். மைசூரின் முஸ்லிம் அரசர் அன்னியர்களை முறியடிக்க பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்தசமயத்தில் ஹைதராபாத் நிஜாம் பிரெஞ்சு கவர்னரான டூப்ளேயிடம் அரசாங்கத்தின் சூத்திரக்கயிறை ஒப்படைத்தான் பிறகு பிரெஞ்சுக்காரர்களின் பலமும் குறைய ஆரம்பித்தது. கிளைவ் நிஜாமுக்கு ஆசை காட்டினன். உடனே பிரெஞ்சுக்காரர்களை விட்டு நிஜாம் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டான்.

ஆங்கிலேயர்களை இந்தியாவை விட்டு வெளியேற்றுவதற்காக மராட்டியர்களும், திப்புசுல்தானும் நிஜாமுடன் சேர்ந்து ஐக்கிய அணி அமைத்தனர். யுத்தம் ஆரம்பமான பிறகு திப்புவையும், மராட்டியர்களையும் மோசம்செய்து உள்ளுக்குள் ஆங்கிலேயர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டான். அச்சமயத்தில் ஹைதராபாத் நிஜாம் மட்டும் துரோகம் செய்யாமலிருந்திருந்தால் வெள்ளையர்கள் இந்தியாவில் காலை ஊன்றிக்கொள்ள ஒருக்காலும் முடிந்திருக்காது. அந்த துரோகச் செயலுக்கு கைக்கூலியாக திப்பு சுல்தான் ஆட்சியில் ஒரு பகுதியும், அதேவிதமான துரோகச் செயல்களுக்காக மஹாராஷ்டிர ஆட்சியின் ஒரு பகுதியும் நிஜாமுக்கு கிடைத்தது அன்றிலிருந்து நிஜாம்கள் வெள்ளைக்காரர்களின் கையாட்களாகவே இருந்து வருகின்றனர். அன்று முன்னோர்கள் செய்த துரோகங்களுக்கு பிரதிப்பலனாக இன்றைய நிஜாம் ஏதேச்சாதிகாரத்தை நிலை நாட்டிக் கொள்ள விரும்புகிறார்.

## நிஜாமின் சொந்த ஆஸ்தி.

நிஜாம் ஒரு பெரிய பணக்கார மனிதர். இந்தியாவின் அனேக பெரிய பெரிய தொழிற்சாலை முதலாளிகளைக்காட்டிலும் அதிக வருமானமுள்ள ஜாகீர் அவருக்குச்சொந்தம். அதன் வருமானம் பூராவும் அவருடைய பாக்கெட்டுக்குப் போவதுடன் சமஸ்தானதிபதி என்ற ஹோதாவில் வசூலிக்கும் பணம் வேறு இருக்கிறது. நிஜாம் கையாட்களான காஸிம் ரஸ்வி, மீர்லாயிக் அலி, அப்துல் ரவூப் போன்றவர்கள் யுத்தகாலத்தில் ஒரு வேலையும் செய்யாமல் லட்சக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்த பேர்வழிகளாவர். ஹைதராபாதில் பொறுப்புவாய்ந்த அரசாங்கம் ஏற்படுவதால் இந்தப் பேர்வழிகளின் சுயநலம் பாதிக்கப்படுகின்றது இவர்கள் பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு அதுதான் காரணம். பாகிஸ்தான், பிரிட்டன், அமெரிக்கா முதலிய இதர நாடுகளில் பிரசாரத்துக்காக நிஜாம் லட்சக் கணக்கான சவரன்களை செலவழிக்கிறார் இன்றைக்கும் பாகிஸ்தானிலுள்ள அநேக பத்திரிகைகளுக்கு நிஜாம் சர்க்கார் சார்பில் கிராண்டு கிடைத்துவருகிறது. அமெரிக்கா, பிரிட்டனைச் சேர்ந்த கிட்டத் தட்ட அரை டஜன் நிருபர்கள் நிரந்தரமாக ஹைதராபாதில் இருந்துகொண்டு நிஜாமின் பணத்தால் சுகபோக வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். அவர்களில் அமெரிக்காவின் மிகப் பெரிய செய்திஸ்தாபன ஏஜென்ஸியின் பிரதிநிதியும் இருக்கின்றார்.

## ஹைதராபாத் விஸ்தீரணமும். ஜனத் தொகையும்.

ஹைதராபாத் சமஸ்தானத்தின் நிலப் பரப்பு 82,698 ச். மைல். ஜனத்தொகை 1,63 38,000 அதில் 8,110 சதுரமைல் விஸ்தீரணமுள்ள பிரதேசம் நிஜாமின் சொந்த ஜாகீராகும். நிஜாமின் கையாட்களான ஜாகீர்தார்களுடைய ஜாகீர்களின் மொத்த விஸ்தீரணம் சமஸ்தான விஸ்தீரணத்தில் 42-சதவிகிதம் இருக்கிறது அதாவது கிட்டத் தட்ட பாதி சமஸ்தானம் ஜாகீர்தார் ஆதிக்கத்தில் இருந்துவருகிறது சமஸ்தான ஜனத்தொகையின் விபரம் வருமாறு;—

| | |
|---|---|
| ஹிந்துக்கள் | 1,40,18,000 |
| முஸ்லிம்கள் | 20,97,475 |
| கிருஸ்துவர்கள் | 2,20,464 |
| சீக்கியர்கள் | 5,336 |
| பார்ஸிகள் | 1,974 |
| இதரர்கள் | 649 |

பாஷை, நாகரீக அடிப்படையில் சமஸ்தானத்தை மஹாராஷ்டிரம், கர்னாடகம், தெலுங்கு, பிரதேசம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். மூன்று பிரிவுகளிலும் முறையே மாராட்டி, கன்னடம், தெலுங்கு பாஷைகள் பேசப்படுகின்றன. மத்திய மகாணம், மெஹ்றா சமஸ்தானம், சென்னை, பம்பாய் மாகாணங்களால் சூழப்பட்டு இந்தியாவின் தயவை நாடி இருக்கவேண்டிய நிலைமையில் ஹைதராபாத் சமஸ்தானம் இருந்துவருகிறது. இன்று இந்திய யூனியன் பொருளாதாரமுற்றுகையிட்டு, கண்காணிக்க ஆரம்பித்து விட்டால் ஹைதராபாத் மக்கள் பட்டினியால் மாண்டு போவர் என்பது நிச்சயம்.

## ஹைதராபாத் கொந்தளிப்பு.


ஹைதராபாத் மக்களில் பெரும்பான்மையோர் இந்திய யூனியனில் சேர விரும்புகின்றனர். ஹைதராபாத் கொந்தளிப்பிலுள்ள அரசியல் அம்சம் இதுதான். ஜாகீர்தார் ஆதிக்கத்தால் மக்கள் அலுத்துவிட்டனர். அதன் பயனாக எங்கு பார்த்தாலும் கிஸான் நடவடிக்கைகள் மும்முரமடைந்திருக்கின்றன. இது ஹைதராபாத் கொந்தளிப்பின் பொருளாதார அம்சமாகும். நல்லகொண்டா, ராய்ச்சூர், மஹ்பூப் நகர், பேலா, உஸ்மான்கட் முதலிய இலாக்காக்களில் கிஸான் கிளர்ச்சி ஓங்கியிருக்கின்றது. இங்குள்ள கிஸான்கள் வரி செலுத்த மறுக்கின்றனர். அதனால் அனேக இடங்களில் போலீஸுக்கும் கிஸான்களுக்கும் இடையே மோதல்கள் நடக்கின்றன கிஸான்களை ஒடுக்குவதற்காக சமஸ்தான அரசாங்கப், ரஜாக்கர்களையும் ராணுவத்தையும் உபயோகிக்கின்றது, அதனால் மேலும் அமைதியின்மை வளருவதுதான் மிச்சம்.

## கொரில்லா யுத்தம்.

அரசியல் கிளர்ச்சி சம்மந்தப்பட்ட வரை சமஸ்தான காங்கிரஸ், சோஷலிஸ்ட் கட்சி முதலிய இதர அரசியல் ஸ்தாபனங்கள் வேலை செய்கின்றன. கிட்டத்தட்ட எல்லா ஜில்லாக்களுக்கும் கிளர்ச்சி பரவிவிட்டது. இச்சமயம் அவர்களுக்கு இந்திய அரசாங்க உதவி இம்மியளவு கிடைத்தாலும் அல்லது பேச்சுவார்த்தை நடத்துவதைவிட்டு இந்திய அரசாங்கம் ஒதுங்கி இருந்து விட்டாலும் நிஜாம் அரசாங்கம் நொடியில் கவிழ்ந்துபோகலாம். சில தினங்களுக்கு முன்னால் புது டெல்லியில் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்குமுன் மும்முரமடைந்திருந்த கிளர்ச்சியைப் பார்த்து ஹைதராபாத்தை விட்டு ஓடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் பூராவும் நிஜாம் செய்துகொண்டிருந்தார்.

நான் ஹைதராபாத்திலிருந்து வருகிறேன். இன்றைய நிலைமையால் நிஜாம் பீதியடைந்திருப்பது எனக்குத் தெரியும். காஸிம் ரஸ்வியின் கூட்டாளிகளும் உணர்ந்தேயிருக்கின்றனர். அரசியல் அணியில் ஹைதராபாத் இந்தியாவை அதிக நாள் எதிர்க்க முடியாதென்று அவர்களுக்கு தெரிந்தேயிருக்கிறது ஆயினும் யுத்த மிரட்டல்களாலும் இதர வழிகளாலும் இந்திய யூனியனை பயமுறுத்தி எப்படியும் தங்கள் எதேச்சாதிகாரத்துக்கு இணங்கும்படி செய்யும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். சில நாடுகள் வெளியிலிருந்து தட்டிக்கொடுத்தாலும் ஒரு சில தினங்களுக்குமேல் எதிர்த்து நிற்கமுடியாதென்று அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் யுத்த மிரட்டல்களால் இந்தியாவை மிரட்டிவிடமுடியுமென்று அவர்கள் நம்புகிறார்கள். ஆகையால் இந்திய அரசாங்கம் மிரட்டல்களை லட்சியம் செய்வது கூடாது.


ஹைதராபாத் துருப்புகள் இந்தியாவை அதிக நேரம் எதிர்த்து நிற்க முடியாதென்று உணர்ந்திருக்கும் மக்களில் பெருமளவுக்கு முஸ்லிம்களும் இருக்கின்றனர். அபாயத்தை உணரும்போது நிஜாமின் கர்வம் பணிந்துவிடும்; காஸிம் ரஸ்வி விமானத்தில் ஏறி பாகிஸ்தானுக்கு ஓடிவிடுவான், பிறகு ரஸ்வி கூட்டாளிகளின் பொறுப்பற்ற உருட்டல், மிரட்டல்களால் யுத்தத்தில் சிக்கிக்கொள்ளும் ஹைதராபாத் முஸ்லிம்களின் தலையில் தான் எல்லா துன்பங்களும் விழவேண்டியிருக்கும்; என்று ஹைதராபாத் பிரபல முஸ்லிம் தலைவர் ஒருவர் என்னிடம் கூறினார்.

Namath Watch Company
37-38, RATTAN BAZAAR,
P. T. MADRAS.

"எலிடா"
ரூபா 95/- மா"
ரோல்டு கோல்டு $7\frac{3}{4}$ செஸ் ஆப்டிக் கிளாஸ் கர்வட் ஷேப்.
ரோமர், பியர்பு, ரிக்கார்டு,
இன்னும் அநேக ரகங்கள் சப்ளை செய்யப்படும்
நேர்த்தியான லேடி கடியாரங்களும் கிடைக்கும்.




ORJEE PRODUCTS,
VALANGAMAN. (S. INDIA.)

பல சிறந்த
அலாரம் டைம்பீஸ்கள்



4½" டயல்
கைபிடியுடன்
அழகிய
கலர் கேடி
மிகவும்
உறுதியாக
தயாரிக்கப்
பட்டவை.
ரூபா 30/-

ஜலால் & ஸன்ஸ்,
ராட்டன் பஜார், சென்னை.

கிளை ஸ்தாபனங்கள்
மவுண்டு ரோடு, சென்னை.
அபிட் ரோடு, ஐதராபாத் டெக்கான்.

# தமாஷ் துணுக்கு.

### இனி பலனில்லை.

ஓருவர்:—காணாமற் போனதாக சொன்ன மோதிரம் கிடைத்து விட்டது

போலீஸ்காரன்:— இனிமேல் அதைச்சொல்லி பிரயோஜனமில்லை. நாங்கள் திருடனை பிடித்தாய்விட்டது.

ஃ ஃ ஃ ஃ

### யோகம்தான்.

முதல் நண்பர்:— நான் மாதம் 50-ரூபாய் சம்பாதிக்கிறேன். என் மனைவி 50-ரூபாய் சம்பாதிக்கிறாள்.

இரண்டாவது நண்பர்:— அப்படியானால் உன்பாடு யோகந்தான் மாதம் 100-ரூபாய் வருமானம் என்று சொல்

முதல் நண்பர்:— இல்லை; நான்வாங்கும் சம்பளத்தைதான் அவள் என்னிடமிருந்து வாங்கிக் கொள்கிறாள்.

### ரகஸ்யம்.

அசன்பீவி:— நான் சொன்ன ரகசியத்தை பாத்திமாவிடம் சொல்லாதே என்று சொன்னேனே நீ அதை அவளிடம் சொன்னதாக பாத்திமா என்னிடம் சொன்னாளே!

அமீதா:— சொல்லி விட்டாளா? நான் அவளிடம் சொன்னதாக உன்னிடம் சொல்லாதே என்று சொன்னேனே!

அசன்பீவி:— சரி; நான் அவள் சொன்னதை உன்னிடம் சொன்னதாக அவளிடம் சொல்லி விடாதே

ஃ ஃ ஃ ஃ

### பங்காளி.

[பாதிராத்திரியில் ஏதோ பலமாக சப்தம் கேட்டது. தூங்கிக்கொண்டிருந்த வீட்டுக்காரர் எழுந்துபோய் பார்த்தார். திருடன் ஒருவன் விளக்கை வைத்துக்கொண்டு என்னவோ தேடிக் கொண்டிருந்தான். என்ன தேடுகிறாய்? என்று கேட்டார் வீட்டுக்காரர்.]

திருடன்:— "பணம்"

வீட்டுக்காரர்:— "பணமா? தேடிப்பார். எதாவது கிடைத்தால் எனக்கும் கொஞ்சம் கொடுத்து விட்டுப்போ.

(V. S. T. முஹம்மது ஹுஸைன்)

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.